பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 02 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்பு தளவாட உற்பத்தியில், நமது விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. தொழில்நுட்ப அடிப்படையிலான நிர்வாகத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar கூறியுள்ளார்.

4. நீர்மூழ்கி கப்பல்களை அழிக்கும் திறன் கொண்ட INS Anjadip போர்க்கப்பல் இன்று நாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

5. ஆஸ்திரேலிய சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில், நமது விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், Jaisalmer விமானப்படை தளத்தில், இந்திய விமானப்படை வீரர்களிடம் இன்று ஆலோசனை மேற்கொண்ட அவர், ராணுவ தளவாடங்களின் உள்நாட்டு உற்பத்தி மேம்பட்டு வருவதாக தெரிவித்தார்.

முன்னதாக, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட Prachand இலகுரக ஹெலிகாப்டரில் இன்று அவர் பயணம் மேற்கொண்டார்.

இந்த ஹெலிகாப்டரின் திறன் குறித்து, குடியரசுத்தலைவரிடம் இந்திய விமானப்படை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

இந்த Prachand ரக ஹெலிகாப்டர்கள், உயரமான மலைப்பகுதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இன்று மாலை, பொக்ரானில் இந்திய விமானப்படையின் வாயுசக்தி போர்ப் பயிற்சியை குடியரசுத்தலைவர் பார்வையிடுகிறார்.

>>>>><<<<<

தொழில்நுட்ப அடிப்படையிலான நிர்வாகத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொழில்நுட்பம், சீர்திருத்தம் மற்றும் நிதி என்ற தலைப்பில் இனறு நடைபெற்ற பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழி கருத்தரங்கில் உரையாற்றிய அவர், சீர்திருத்த நடவடிக்கைகள், மக்களுக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும் என்று கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம், வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புணர்வையும் உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு உள்கட்டமைப்புக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு துறைகள் மேம்பட்டால் மட்டுமே, நாடு வளர்ச்சியடையும் என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய நிதிநிலை அறிக்கை கொள்கை முடிவுகளுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்று பிரதமர் தெரிவித்தார்.

>>>>><<<<<

விடுதலைப் போராட்ட வீரர் சந்திரசேகர் ஆசாதின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள சமூகவலைதள செய்தியில், சந்திரசேகர் ஆசாத், சுதந்திர போராட்டத்தில் துணிச்சலுடன் ஈடுபட்டதாக புகழாரம் சூட்டினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், சந்திரசேகர் ஆசாதின் வாழ்க்கை வரலாறு அநீதிக்கு எதிரான போராட்டத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக இன்னுயிரை நீந்த அவரின் தியாகம் என்றென்றும் நினைவுவுரத்தக்கது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், கடைசிமூச்சு வரை ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக போராடியவர் சந்திரசேகர் ஆசாத் என்று கூறியுள்ளார்.

அன்னாரது தியாகம், நாட்டுப்பற்றுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நீதித்துறையில் ஊழல் குறித்த பகுதி NCERT பாடப்புத்தகத்தில் இடம்பெற்றது துரதிருஷ்டவசமானது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உச்சநீதிமன்றத்தின் தடை உத்தரவுக்கு ஏற்ப, இந்த பாடப் புத்தகங்களை திரும்பப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

NCERT புத்தகத்தில் இத்தகைய தகவல்களை சேர்த்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க துறை செயலருக்கு அனுமதி அளித்துள்ளதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் கூறினார்.

நீதித்துறையில் ஊழல் குறித்த பகுதி NCERT-யின் 8வது பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டதை அடுத்து, உச்சநீதிமன்றம் இந்த புத்தகங்களுக்கு தடை விதித்திருந்தது.

இந்த புத்தகங்களின் அனைத்து பதிப்புகளையும் திரும்பப் பெறுவதற்கும், டிஜிட்டல் பதிப்புகளை இணையதளங்களிலிருந்து நீக்குவதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதுதொடர்பாக வழக்கை அடுத்த மாதம் 11ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

>>>>><<<<<

தீவிரவாதம் என்பது மிக மோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் மனித உரிமை கவுன்சில் மாநாட்டில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், தீவிரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்பட உலக நாடுகளை கேட்டுக் கொண்டார்.

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுத்தால் மட்டுமே, மனித உரிமைகளை பாதுகாக்க முடியும் என்று அவர் கூறினார்.

மனித உரிமை கவுன்சில் உறுப்பினராக இந்தியா 7வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கிலிருந்து, தில்லி முன்னாள் முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், முன்னாள் துணை முதலமைச்சர் திரு. மனீஷ் சிசோடியா ஆகியோரை விடுதலை செய்து தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த சிறப்பு நீதிபதி திரு. ஜிதேந்திரா சிங், சிபிஐ தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பான வழக்கில், மேலும் 21 பேரை விடுதலை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தலில் முதல்முறை வாக்காளர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

தமிழகத்தில் 12 லட்சத்து 50 ஆயிரம் முதல்முறை வாக்காளர்கள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

வேட்பாளர்களின் வண்ண புகைப்படம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொருத்தப்படும் என்று அவர் கூறினார்.

தமிழகத்தில் 77ஆயிரத்து 32 வாக்குச்சாவடி மையங்கள் இருப்பதாகவும், 5 கோடியே 67 லட்சத்து 7 ஆயிரத்து 380 வாக்காளர் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையத்தின் ecinet செயலி மூலம் தேர்தல் முடிவுகளை அறிந்து கொள்ளலாம் என்றும் திரு. Gyanesh Kumar தெரிவித்தார்.

வாக்காளர்களின் வசதிக்காக ஒரு வாக்குச்சாவடிக்கு அதிகபட்சம் ஆயிரத்து 200 வாக்காளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வாக்குச்சாவடிக்குள் மொபைல் போன்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர்,

மொபைல் போன்களை பாதுகாப்பாக வைக்க, வாக்குச்சாவடிக்கு வெளியே, பாதுகாப்பு வசதி அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, திரு. க்யானேஷ் குமார் தலைமையிலான தேர்தல் ஆணைய குழுவினர், அரசியல் கட்சி பிரதிநிதிகள், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் தமிழக சட்டப்பேரவை தேர்தல் குறித்து ஆலோசனை நடத்தினர்.

>>>>><<<<<

நீர்மூழ்கி கப்பல்களை அழிக்கும் திறன் கொண்ட INS Anjadip போர்க்கப்பல் இன்று நாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற விழாவில் கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி, இந்த போர்க்கப்பலை கடற்படையின் கிழக்கு Command பிரிவில் இணைத்தார்.

கொல்கத்தாவில் உள்ள Garden Reach Ship Builders and Engineers நிறுவனத்தால் கட்டப்பட்ட INS Anjadip போர்க்கப்பல், நாட்டின் பாதுகாப்புக்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுக்கப் போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் தாலிபான் நிர்வாகம், எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் ராணுவ வீரர்களை சுட்டுக் கொன்றதாகவும், கைது செய்துள்ளதாகவும் வெளியான தகவல்களை அடுத்து, பாகிஸ்தான் அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் திரு. Khawaja Asif வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆப்கானிஸ்தானுக்கு எதிராக போர் தொடங்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பை அடுத்து, காபூல், Kandahar, Paktia நகரங்கள் மீது பாகிஸ்தான் வான்தாக்குதலை நடத்தியுள்ளது.

எல்லைப்பகுதியில் ஆப்கானிஸ்தான் ராணுவத்தின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுத்துள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் திரு. Mohsin Naqvi தெரிவித்துள்ள்ளார்.

>>>>><<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-4, 4-6, 6-4 என்ற செட்கணக்கில் சீனாவின் Chengyiyi Yuan-ஐ வென்றார்.

>>>>><<<<<

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா வெற்றிபெற 252 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

Hobart-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா 9 விக்கெட் இழப்புக்கு 251 ரன் எடுத்தது.

>>>>><<<<<

ரஞ்சிக் கோப்பை கிரிகெட் போட்டியின் இறுதியாட்டத்தில், நான்காம் நாளான இன்று கர்நாடக அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஜம்மு கஷ்மீர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 11 ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<<

Hubballi-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஜம்மு கஷ்மீர் முதல் இன்னிங்ஸில் 584 ரன் எடுத்துள்ளது

கர்நாடகாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 293 ரன்.

>>>>> END <<<<<